23rd July 1957]

தரலாம், அல்லது அவர்கள் கொடுக்க நேரும் வாடகையைக் கொடுக்கலாம். இப்போது புதிதாக வீடுகள் கட்டப்படுகின்றனவா அல்லது அத் தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப் பணம் தரப்படுமா ?

The Hon. Sri V. RAMIAH : இது வரைக்கும் டிபார்ட்மெண்டு வீடுகளைக் கொடுத்து வாடகை வாங்குகிறோம். வீடு கட்டவும் திட்டங்கள் இருக்கின்றன.

Sri T. P. ELUMALAI : இம்மாதிரி ஐந்தாண்டு திட்டத்தில் மின்சார இலாகாதான் நல்ல வேலை செய்திருக்கிறது. அதனால் அந்த இலாகா தொழிலாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஏதாகிலும் சன்மானம் வழங்குவதற்கு இந்த அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

The Hon. Sri V. RAMIAH : மின்சார இலாகா நல்ல வேலை செய்திருக்கிறது என்பது எல்லோருக்கும் புரிந்திருக்கிறது. அதைப்பற்றி எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லை. அவர்களுக்கு எந்த விதமான சன்மானம் கொடுக்கப்பட வேண்டும் என்று சொன்னால் அதைப் பற்றிக் கவனிக்கப்படும்.

Sri M. JAGANNATHAN : மின்சார இலாகாவின் கீழ்த்தர சிப்பந்திகளின் குறைகளைப் பூர்த்தி செய்வதற்கு நிதி நிலைமைதான் காரணம் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார். இம்மாதிரி கீழ்த்தர சிப்பந்திகளுடைய குறைகளைப் பூர்த்தி செய்வதற்கும் வீடுகள் இலவசமாகக் கட்டிக்கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறார்களா ? அதற்கு சர்க்காருக்கு எவ்வளவு பொருள் செலவாகும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதற்கு வேண்டிய திட்டம் என்ன என்பதையும் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

Thr Hon. Sri V. RAMIAH : வருஷம் ஒன்றுக்கு அறுபது ஆயிரம் ரூபாய் ஆகிறது. இன்னும் தாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காக அதை நான்கு வருஷத்திற்குள் பூர்த்தி செய்துவிடவேண்டும் என்று திட்டம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த வருஷத்திலேயே ஆரம்பித்து இன்னும் நான்கு வருஷங்களில் பூர்த்தி செய்துவிடவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Maida

* 201 *Q*.—**Sri M. JAGANNATHAN** : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received a petition, dated 26th June 1957, from the Persian Bakery, Madras, regarding the difficulties experienced by bakeries in the City of Madras to get supplies of maida from the Flour Mills at the controlled prices; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) This Government took up the matter with the Regional Director (Food), Madras, and the Union Minister for Food and Agriculture, and apprised them of the situation prevailing in Madras City in regard to the availability of wheat products, viz., maida, atta, sooji, etc., at fair prices. The Government of India have since made necessary arrangements for the supply of adequate stocks of wheat to the flour mills for conversion into maida and atta, etc., and the latter have agreed to sell the above wheat products to the bakeries and the public at fair prices.

A ' Press Note ' to this effect, dated 8th July 1957, has been issued by the Regional Director (Food), Madras.

SRI M. JAGANNATHAN : சென்னையில் இருக்கிற ஷா வாலெஸ் மாவுமில், செஞ்சுரி மாவு மில், தென் இந்தியா மாவு மில் இந்த மூன்று மில்களிலும் ஏறக்குறைய 45 ஆயிரம் மூட்டை மைதா மாவு தயாரிக்கப் படுகிறது. ஆனால் சென்னையில் இருக்கிற பேக்கரிகளுக்கு 6,000 மூட்டை மைதா கூட கிடைப்பதில்லை. அதே சமயத்தில் கள்ளச் சந்தையில் ஒரு மூட்டை ரூ. 50-க்கு கிடைக்கிறது. இந்த விலைக் கட்டுப்பாடு வந்த பிறகு பேக்கரிகளுக்கு குறைந்த விலையில் போதிய அளவில் மைதா மாவு கிடைக்காமல் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த நெருக்கடியை தீர்ப்பதற்கு தக்க நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பு கூறியது போல் மில்களிலிருந்து மைதா மாவு சுலபமாகக் கிடைப்பதற்கும் குறைந்த விலைக்குக் கிடைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு ஆட்டா, சொஜ்ஜி போன்றவைகளுக்கு பம்பாயிலிருந்து இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, is it not a fact that the Government of India have come forward to supply five thousand tons of flour to South India?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, there should be no difficulty about the quantity that is required. Any amount of wheat could be got and that could be made into flour.

Geological survey in Kanyakumari district

* 202 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the Government have conducted any geological survey of the forest lands and hilly tracts in Kanyakumari district?

THE HON. SRI R. VENKATARAMAN : The systematic geological mapping and mineral survey of the Kanyakumari district has been taken up by the Geological Survey of India only during the last field season.

SRI T. T. DANIEL : Sir, several tons of illuminite and monozite are removed every year in Mavalakurichi in Colachel constituency. It is now stated that at Leepuram, which is near Cape Comorin, we can find deposits of these minerals. It is also believed that thorium deposit is also available in some regions in this district. We can find huge supplies of mica in hilly tracts and some parts of this Kanyakumari district. As a matter of fact there is a tank called ' Mica ' tank. Will the Government be pleased to take the necessary steps to conduct a systematic geological survey of this district?

THE HON. SRI R. VENKATARAMAN : I said that geological survey was being conducted and that it would be continued. We cannot decide on the existence of minerals merely by looking at it. It has to be investigated. It is true there are some traces of illuminite deposit near Leepuram, but there is no indication of the existence of other minerals stated by the hon. Member.

SRI K. ANBAZHAGAN : தமிழ் நாடு முழுவதிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் மூலப்பொருள்கள் பல ஏராளமாக குவிந்து கிடப்பதாக தெரியவருவதாலும் தமிழ் நாடு பொருளாதாரத் துறையில் முன்னேற்ற மடையாமல் இருப்பதாலும் தமிழ் நாடு பூராவிலும் ஜியாலாஜிகல் சர்வே